# மாலத்தீவு அதிபருடன் பிரதமரின் சந்திப்பு

டிசம்பர் 01, 2023

ஐக்கிய அரபு அமீரகத்தில் 1 டிசம்பர் 2023 அன்று நடைபெற்ற சிஓபி-28 உச்சிமாநாட்டின் இடையே பிரதமர் திரு நரேந்திர மோடி மாலத்தீவுக் குடியரசின் அதிபருடன் டாக்டர் முகமது முய்சுவை தனியாக சந்தித்தார்.

அதிபராக முய்ஸு பதவியேற்றதற்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

மக்கள் தொடர்பு, வளர்ச்சி ஒத்துழைப்பு, பொருளாதார உறவுகள், பருவநிலை மாற்றம் மற்றும் விளையாட்டு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் இடையே பரந்த அளவிலான இருதரப்பு உறவுகளை இரு தலைவர்களும் மதிப்பாய்வு செய்தனர். இரு தலைவர்களும் தங்கள் கூட்டுறவை மேலும் ஆழப்படுத்துவது குறித்தும் விவாதித்தனர். இது சம்பந்தமாக, அவர்கள் ஒரு முக்கிய குழுவை அமைக்க ஒப்புக்கொண்டனர்.

**துபாய்**
**டிசம்பர் 01, 2023**